# பரீட்சகரின் அறிக்கை

## மட்டம் II பரீட்சை – 2023 சனவரி

## (202) டிஜிட்டல் சூழலில் தகவல் முறைமைகள்

இவ்வினாத்தாள் தகவல் தொழில்நுட்பத்தின் ஒட்டுமொத்த விடயங்களையும் சோதிக்கும் அதே நேரம் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத்தின் புதிய அபிவிருத்தி மற்றும் போக்குகளின் மீதும் அதிக கவனம் செலுத்தியுள்ளது. இவ்வினாத்தாளுக்கு விடையளிக்கும் போது தகவல் தொழில்நுட்பத்தின் மீது செல்வாக்கு செலுத்தும் விழுமியம், சமூக மற்றும் சட்ட சூழல் மீதான சிறந்த அறிவு முக்கியமானது என்பதும் குறிப்பிடத்தக்கது.

இவ்வினாத்தாள் **A, B** மற்றும் **C** என மூன்று பிரிவுகளைக் கொண்டது. இவ்வினாத்தாளின் அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்குமாறு வேண்டப்பட்டுள்ளது.

## பிரிவு A

### வினா. 01

"டிஜிட்டல் சூழலில் தகவல் முறைமை" இனுடைய முழுப்பாடத்திட்டமும் இலகுவான மற்றும் விளங்கிக்கொள்ளக்கூடிய வகையில் சோதிக்கப்பட்டுள்ளது. பெரும்பாலும் அனைத்து மாணவர்களும் இவ்வினாவினை முயற்சித்துள்ளனர். பெரும்பாலானவர்கள் 10 இற்கும் மேலதிகமான புள்ளிகளை பெற்றுள்ளனர்.

இருப்பினும், குறிப்பாக தகவல் தொழில்நுட்பத்தின் சட்ட விடயங்களுடன் தொடர்புடைய வினாக்கள் பரீட்சார்த்திகளுக்கு கடினமாக இருக்கின்றது. அவ்வாறான விடயப்பரப்புகளில் போதிய அறிவு இருக்கவில்லை.

முன்னைய பரீட்சைகளுடன் ஒப்பிடும்போது இவ்வினாவிற்கு குறைந்த புள்ளிகள் பெற்றுள்ளனர். மாணவர்கள் இவ்வாறான புறநிலைத்தேர்வு வினாக்களுக்கு உயர்ந்த புள்ளிகளை பெற கவனம் செலுத்த வேண்டும். ஏனெனில் இவ்வினாக்கள் இப்பாடத்தில் உயர்ந்த பெறுபேறுகளை ஈட்டுவதற்கு உதவும்.

**இத்தகைய புறநிலைத் தேர்வு வினாக்களில் செயல்திறன் மேம்படுத்தப்படல் வேண்டும்.**

## பிரிவு B

### வினா. 02

இவ்வினாவில் நிதித்துறையில் தகவல் தொழில்நுட்பம் மற்றும் தகவல் முறைமையின் பிரயோகம் சோதிக்கப்பட்டுள்ளது.

பெரும்பாலும் அனைத்து பரீட்சாரத்திகளும் இவ்வினாவிற்கு விடையளித்துள்ளனர்.

பகுதி (**b**) இல் ஊழியர்களின் செயலாற்றுகையை மேம்படுத்துவதற்கு தனிநபர் தகவல் முகாமைத்துவத்தை எவ்வாறு பயன்படுத்தலாம் என விளக்குவதில் கடினமாக இருந்துள்ளது.

**இவ்வினாவிற்கான ஒட்டமொத்த செயல்திறன் சராசரி மட்டத்தில உள்ளது.**

## வினா. 03

இவ்வினா தரவுத்தளத்தின் அடிப்படை மற்றும் அதன் அம்சங்கள் தொடர்பான பரீட்சார்த்திகளின் அறிவினை சோதிக்கும் நோக்குடன் தயாரிக்கப்பட்டுள்ளது.

பெரும்பாலும் ஒவ்வொரு பரீட்சார்த்திகளும் இவ்வினாவிற்கு முயற்சித்துள்ளனர்.

பல மாணவர்களால் **பகுதி (b)** இற்கு சரியாக விடையளிக்க முடியவில்லை. மாணவர்களுக்கு தரவுகளின் ஒருங்கிணைப்பு மற்றும் நிலைப்புத்தன்மை பற்றி எந்த அபிப்பிராயமும் இருக்கவில்லை.

**இவ்வினாவிற்கான ஒட்டமொத்த செயல்திறன் சராசரி மட்டத்தில் உள்ளது.**

## வினா. 04

தகவல் முறைமை மற்றும் வணிகப்பகுப்பாய்வு, வணிக நுண்ணறிவு பற்றிய பரீட்சாரத்திகளின் அறிவினை சோதிக்கப்பட்டுள்ளது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் இவ்வினாவிற்கு முயற்சித்துள்ளனர்.

சில மாணவர்கள் இவ்வினாவினை தவிர்த்துள்ளனர்.

பகுதி (**a**) இல் சில மாணவர்களுக்கு **DSS** மற்றும் **MID** பற்றி தெளிவான அபிப்பிராயம் இல்லை.

பகுதி (**B**) இல் சில பரீட்சார்த்திகளால் வணிக நுண்ணறிவு மற்றும் வணிக பகுப்பாய்வு என்பவற்றுக்கிடையிலான வேறுபாட்டை தெளிவாக இனங்காண முடியவில்லை.

**இவ்வினாவிற்கான ஒட்டமொத்த செயல்திறன் சராசரி மட்டத்தில் உள்ளது.**

## வினா. 05

சமூக வலைத்தளங்களை அதிகமாக பயன்படுத்துவதால் ஏற்படக்கூடிய எதிர்மறையான தாக்கங்கள் மற்றும் தகவல் பாதுகாப்பு கோட்பாடுகள் பற்றிய பரீட்சார்த்திகளின் விழிப்புணர்வு பற்றி சோதிக்கப்பட்டுள்ளது.

பகுதி (**A**) (**a**) மற்றும் (**b**) இற்கு பெரும்பாலான மாணவர்கள் சரியாக பதிலளித்துள்ளனர்.

பகுதி (**B**) இற்கு சில மாணவர்களால் ஒழுங்காக விளக்கமளிக்க முடியவில்லை.

இவ்வகையான விடைகளை எழுதும் போது அதிக புள்ளிகளை பெற மாணவர்கள் மேலதிக விளக்கங்களை வழங்க வேண்டும்.

குறித்த எண்ணிக்கையான மாணவர்களால் இவ்வினாவிற்கு சிறப்பான புள்ளிகளை பெற முடிந்தது.

**இவ்வினாவிற்கான ஒட்டமொத்த செயல்திறன் திருப்திகரமான மட்டத்தில் உள்ளது.**

**வினா. 06**

சைபர் நுண்கொடுப்பனவு மற்றும் கூட்ட நிதியிடல் மாதிரிகளை உள்ளடக்கிய தற்கால தொழில்நுட்பத்துடன் தொடர்புடைய பரீட்சார்த்திகளின் விழிப்புணர்வு சோதிக்கப்பட்டுள்ளது.

பல மாணவர்களால் **பகுதி (a)** இற்கு சரியாக விடையளிக்கப்பட்டிருந்தது.

ஆனால் ஒப்பிட்டு பார்க்கும் போது கூட்ட நிதியிடல் மாதிரிகள் தொடர்பான பரீட்சார்த்திகளின் அறிவு குறைவாகவே உள்ளது.

முாணவர்கள் சுய பாடப்புத்தகத்தில் உள்ளடக்கப்பட்டள்ள இவ்வாறான பாடங்களை படிப்பதற்கு அதிக நேரத்தினை ஒதுக்க வேண்டும்.

**இவ்வினாவிற்கான ஒட்டமொத்த செயல்திறன் திருப்திகரமான மட்டத்தில் உள்ளது.**

**வினா. 07**

இவ்வினாவானது வழங்கப்பட்ட வழக்கினை வாசித்து கோட்பாட்டினை விளங்கி தரப்பட்ட விடயத்தில் சரியாக பிரயோகிக்க எதிர்பார்க்கப்பட்டுள்ளது. சில்லறை வியாபாரத்தில் ஈடுபடுகின்ற நிறுவனமொன்றுக்கான சாத்தியமான தகவல்தொழிநுட்ப தந்திரோபாயங்களை இனங்காணக்கூடிய மாணவர்களின் தகைமையை பரீட்சிக்கப்பட்டுள்ளது.

இவ்வினாவின் பகுதி (**a**) இல் நடமாடும் கணணிச் சாதனங்கள் மீதான அறிவினையும் பகுதி (**b**) இல் அதன் நோக்கங்களும் சோதிக்கப்பட்டுள்ளது. பரீட்சார்த்திகள் இவ்விரு பகுதிக்கும் தமது பொது அறிவினைக் கொண்டு நியாயமாக விடையளித்துள்ளனர்.

பரிவர்த்தனைச் செயன்முறைப்படுத்தல் முறைமையின் பண்புகள் மற்றும் வணிகச் செயற்பாடுகளை மேம்படுத்துவதற்கு அவற்றின் பிரயோகம் என்பன பகுதி (**c**) இல் சோதிக்கப்பட்டுள்ளது.

பகுதி (**e**) இல் இணையப் பாதுகாப்பினை மேம்படுத்துவதற்கு எடுக்கக்கூடிய நடவடிக்கைகள் எதிர்பார்க்கப்ட்டுள்ளது. பெரும்பாலும் அனைத்து பரீட்சார்த்திகளும் இவ்வினாவிற்கு முயற்சித்ததோடு சரியான பதில்களையும் எழுத முடிந்துள்ளது.

இருப்பினும், சில பரீட்சார்த்திகள் பின்வரும் விடயப்பரப்பில் பிரச்சனைகளை எதிர்கொண்டுள்ளனர்.

வணிகத்தில் பரிவர்த்தனைச் செயன்முறைப்படுத்தல் முறைமையின் பிரயோகங்களை இனங்காணல். தரவுத்தள முகாமைத்துவத்துடனான வணிகத்தின் தொடர்பு.

தரவுச் சுரங்கமிடல் நுட்பங்களினை விளங்கிக் கொள்ளல் மற்றும் அமுல்படுத்தவதில் சிக்கல்கள் உள்ளன. பரீட்சார்த்திகள் தகவல்முறைமையின் நடைமுறை வாழ்க்கை பிரயோகங்கள் மீது மேலதிக கவனம் செலுத்த வேண்டும். இவ்வகையான வினாக்களுக்கு விடையளிக்கும் போது நடைமுறைச் சிந்தனை அவசியமாகும்.

பரீட்சார்த்திகளின் வழக்கு வினா தொடர்பான செயற்திறன் முன்னேற்றமடைந்துள்ளது.

**இவ்வினாவிற்கான ஒட்டமொத்த செயல்திறன் திருப்திகரமான மட்டத்தில் உள்ளது.**

- - -

**<u>செயல்திறனை மேம்படுத்துவதற்கான குறிப்புகள்:</u>**

**(1)** முழுமையான பாடத்தையும் முற்றிலும் படித்தல்.

**(2)** வினாவினை தெளிவாக வாசிப்பதுடன் நேரடி விடை எதிர்பார்க்கும் வினாவிற்கு தேவையற்ற விளக்கங்கள் கொடுப்பதை தவிர்த்தல்.

**(3)** விசேடமாக பாடப்புத்தகம், நூல்கள், கையேடுகள், புத்தகங்கள், மத்தியவங்கி ஆண்டறிக்கை மற்றும் பாடத்துடன் தொடர்படைய ஏனையவற்றையும் படித்தல்.

**(4)** விடையெழுதும் போது தகவல் தொழிநுட்பத்துடன் தொடர்புடைய தத்துவார்த்த கருத்துக்கள் மற்றும் நடைமுறை அறிவினை ஒழுங்கமைந்த முறையில் முன்வைப்பதோடு தேவைப்படும் இடங்களில் உதாரணங்களை குறிப்பிடுதல் அவசியமாகும்.

**(5)** கையெழுத்து வாசிக்ககூடிய வகையில் இருப்பதோடு வினா இலக்கங்களை சரியான முறையில் தெளிவாக எழுதியிருப்பதை உறுதி செய்தல்.

**(6)** வினாத்தாளில் கொடுக்கப்பட்ட அறிவுறுத்தல்களை பின்பற்றல்.

**(7)** வினாத்தாளில் கொடுக்கப்பட்ட அறிவுறுத்தல்களை பின்பற்றல்.

**(8)** வினைத்திறனான நோ முகாமைத்துவத்தை பிரயோகித்தல்.

**(9)** விடைத்தளை கையளிக்கும் முன்னர் வினா இலக்கங்களை மீள சரிபார்த்தல்.

**(10)** நம்பிக்கையுடன் பரீட்சையில் அமர்தல் மற்றும் பரீட்சையில் சித்தி பெறுவதற்கான அதிகபட்ச எதிர்பார்ப்பைக் கொண்டிருத்தல்.

- * * * -